www.tamilarangam.net

ஈழச்செய்தி
EELAM NEWS
★EPIC
(ESTD IN 1980) POST BAG 5551, MADRAS-94, INDIA.

கடிதம் 28 மார்ச்சு 1985

# ஈழத் தேசிய விடுதலை முன்னணியைப் (ENLF) பலப்படுத்துவோம்.

# ஆயுதங்கள் அனைத்தையும் எதிரியை நோக்கி உயர்த்துவோம்.

ஈழத் தேசிய விடுதலை முன்னணியில் உள்ள TELO, EROS, EPRLF என்னும் அமைப்புக்கள் ஒன்றுபட்டுச் சிறீலங்கா அரசுடன் போரிடப் போவதாக பாசிஸ்ட் ஜே. ஆர். அச்சம் தெரிவித்துள்ளான். "எங்கள் போராளிகள் ஒன்றாதல் கண்டு ஈழத்தின் பகைவர் ஓடி ஒளியட்டும்."



பிணைத்த விலங்குகளைத்
தகர்க்கும் ஈழப்போரில்
ஏகாதிபத்தியம்
எந்த வேடத்தில் நுழைந்தாலும்
வெல்லப்போவது மக்கள் மட்டுமே.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆசிரியர் குறிப்புகள்

## *அனைத்து இயக்கங்களும் இணைந்து போராடுவோம் !*

## *ஈழத் தேசிய விடுதலை முன்னணியை பலப்படுத்துவோம் !*

சிறீலங்கா நவபாசிச அரசாங்கம் இன்று ஈழ மக்களைக் கண்மூடித் தனமாக ஆயிரக்கணக்கில் கொலை செய்து கொணடிருக்கிறது. நாளாந்தம் நூற்றுக்கணக்கான தமிழ் வாலிபர்களை ஈழமெங்கும் கைது செய்தவண்ணமுள்ளது. அவ்வாலிபர்கள் சிறீலங்கா சித்திரவதை முகாம்களில் கொலைகளுக்கும் கொடூர சித்திரவதைகளுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். அங்குமிங்குமாக வெறி பிடித்தலையும் சிறீலங்கா அரசின் இராணுவம் தமிழ் பெண்களைக் கற்பழித்துக் கொண்டிருக்கிறது.

எந்த நேரம் என்ன நடக்கும் என்ற அச்சத்தில் துப்பாக்கி வேட்டுச்சத்தத்தையும் வெடிகுண்டுகளின் ஓசையையும் கேட்ட வண்ணம் மக்கள் நிம்மதியற்ற நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பலர் சமைத்த உணவைச் சாப்பிட முடியாத மன நிலையிலும். இரவுகளில் நித்திரையின்றியும் மிகவும் கலக்கத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பொதுவாக மக்கள் இந்த இயக்கங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து தீரமுடன் போராடி எமது நாட்டை எதிரியிடமிருந்து விரைவில் மீட்காதா என்னும் ஆதங்கத்துடன் அம்முடிவை மிகவும் ஆவலாக எதிர் பார்த்து தமது கஸ்டங்கள் சுமைகளைத் தாங்கிக் கொண்டு வருகிறார்கள்.

இந்நிலையில் ஈழ விடுதலைக்காகப் போராடும் அனைத்து இயக்கங்களும் இணைய வேண்டும் என்ற சுலோகம் எழுப்பப்பட்டுள்ளது.

1984-ம் ஆண்டு எப்ரல் மாதம் தமது கூட்டமைப்பைப் பிரகடனப்படுத்திய TELO, EROS EPRLF என்னும் ஆயுதம் ஏந்திப்போராடும் விடுதலை இயக்கங்கள் கடந்த 10 மாதங்களாய் கூட்டாகப் பல சாதனைகளைப் புரிந்திருக்கின்றன. தற்போது இக்கூட்டமைப்புக்கு **ஈழத்தேசிய விடுதலை முன்னணி** (ENLF) என்ற பெயரும் இடபபட்டுள்ளது.

கூட்டாக இராணுவத்தயாரிப்புகளிலும், கூட்டாகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலும், ஒருவருக்கு மட்டுமேயுள்ள பிரச்சினை தீர்ப்பதற்கு மற்றவரின் உதவியை நாடுவதிலும், கூட்டில் இல்லாத இயக்கங்களுடனான பிரச்சினைகள் ஏற்படும்போது கூட்டின் உதவியுடன் தீர்ப்பதிலும், கூட்டாக நிதிதிரட்டுவதிலும மற்றும் பல்வேறுவிடயங்களிலும் முன்னேற்றகரமாக செயற்பட்டுவந்துள்ளன. இக்கூட்டின்வளர்ச்சியின் காரணமாக **ஈழ தேசியவிடுதலை முன்னணியானது** தற்போது ஈழவிடுதலையை மிக விரைவாக, வென்றெடுப்பதற்கும் அழிவுகளைக் குறைப்பது என்பன விடயமாகவும் மிகவும் ஆழமான முறையில் கூட்டுஅரசியல், கூட்டு இராணுவ நடவடிக்கைகளில் சேர்ந்து திட்டமிட்டு வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மக்கள் துன்பப்படும்போது ஒவ்வொரு இயக்கமும் தத்தமது தனிப்பட்ட நலன்களை முக்கியப் படுத்துவது சரியா? என்ற கேள்வியைப் பகிரங்கப் படுத்திக்கொண்டு ஐக்கிய முயற்சியில பலகுழுக்களும் தனி நபர்களும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். இவர்களின் முயற்சியையிட்டு நாம் மகிழ்ச்சியுறும் அதே வேளையில் இப்படியானவர்கள் ஈழமக்களின் பால் குறிப்பாக விடுதலைஇயக்கங்களின் பால் மிகவும் நாணயமானவர்களாக இருக்க வேண்டியதும் அவசியமானதாகும்.

EPRLF, TELO, EROS ஆகியவற்றின் கூட்டமைப்பான ஈழத்தேசிய விடுதலை முன்னணியானது ஆரம்பத்திலிருந்தே இயக்கங்களின் ஒற்றுமை என்பதைச் சாத்தியமாக்க இயக்கங்களினால் மட்டுமே முடியும் என்பதை உறுதியாகக் கூறிக் கொண்டு செயற்பட்டு வந்துள்ளது. ஆரம்பத்தில் ஐந்து இயக்கங்களினதும் ஐக்கியத்தை முக்கியப் படுத்திய ஐக்கிய முன்னணி இப்போது அனைத்து இயக்கங்களினதும் ஒற்றுமையை நடைமுறைப் படுத்தும செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளமை பெரிதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மேலும் இன்னுமொரு முக்கியவிடயத்தைச் சுட்டிக்காட்ட வேணடியுள்ளது. கடந்த 10 மாதங்களாக TELO, EROS, EPRLF கூட்டமைப்பாகிய ஈழத் தேசிய விடுதலை முன்னணியை ஆதரிக்கும்படி வெளி நாடுகளில் உள்ள பணவசதி படைத்த குறிப்பாக ஈழத்தமிழர்களை அணுகிய போது அவை மூன்று சிறிய இயக்கங்கள் என்று கூறி முற்றாக புறக் கணித்துவிட்டு ஒற்றுமை பற்றிய இலவச ஆலோசனைகளையே வழங்கிவந்தனர். இது மறைமுகமாக ஐக்கியப்பட்ட இயக்கங்கள் பலம பெறுவதற்குத் தடையாகவே இருந்து வந்தது.

ஆனால் இதுபோன்ற பல தடைகளையெல்லாம் மீறிக்கொண்டு EPRLF, TELO, EROS ஆகியன கூட்டாக செயற்பட்டு வந்தன. தற்போதாவது வெளிநாடுகளில் உள்ள பல தமிழர்களுக்கு, ஐக்கியம் பற்றிய விடயத்தில் ஈழத்தேசிய விடுதலை முன்னணியானது எவ்வளவு தூரம் ஈழ விடுதலைப் போராட்டத்தில் முக்கிய வளர்ச்சியைப் பெற்று பெரும்பங்கு வகிக்கின்றது என்ற உண்மை நிலையும் தெரிய வந்திருக்கும் என நாம் நம்புகின்றோம்.

''**ஒற்றுமைப்பட்டிருப்பவர்களைப் பலப்படுத்துவதன்மூலமே ஒற்றுமையை விரிவாக்கி பலப்படுத்த முடியும்** ஏற்பட்டிருக்கும் ஒற்றுமை சிறியதாயிருப்பினும் கூட அதனைக் கிண்டல் செய்வதிலும் நிராகரிப்பதிலும ஈடுபடுவது ஒற்றுமையாய் இருக்கின்ற நிலையையும் பாழ்படுத்தி விடும செயலாகவே அமையும்''.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சிறீலங்கா கடற்படை முகாம் மீது தாக்குதல்

## ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி நடவடிக்கை!

பெப் 11. காரை நகரில் உள்ள சிறீலங்கா கடற்படை முகாம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப் படையால் (PLA) தாக்கப்பட்டது. இயந்திரத் துப்பாக்கிகள, ராக்கெட் குண்டுகள் வீசி 100க்கு மேற்பட்ட கடற்படைக் குண்டர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இரு பீரங்கி விசைப் படகுகளும், ஜீப் வண்டி ஒன்றும், டரக் வண்டிகளும் சேதமாக்கப் பட்டன. சுமார் 3 மணி நேரம் நடைபெற்ற இச் சமரில் மக்கள் விடுதலைப் படையைச் சேர்ந்த் ஒரு போராளி மட்டுமே காயமடைந் துள்ளார். ஆனால் சிறீலங்கா அரசு 8 பேர் கொல்லப்பட்டதாக பொய்யான தகவலைப் பரப்பியது. இத்தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்த போது குருநகர், பலாலி இராணுவ முகாம்களை சுற்றியுள்ள பாதைகளில் மக்கள் விடுதலைப் படை கண்ணிவெடிகளை வைத்திருந்தனர்.

மக்கள் விடுதலைப் படையின் இந்த இராணுவ நடவடிக்கையின் போது தமிழ் ஈழ விடுதலை இயக்கமும் (TELO) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமும் (LTTE) மானசீகரீதியில் பெரிதும் ஒத்துழைப்பு வழங்கியது குறப்பிடப்பட வேண்டிய ஒன்றாகும்.



### முன் பக்கத் தொடர்ச்சி

இவையே நாம் அனைவருக்கும கூறக்கூடிய விடயமாகும்.

''ஈழததேசிய விடுதலை முன்னணி''யில் (ENLF) உள்ள TELO, EROS, EPRLF, ஆகியவற்றோடு அனைத்து இயக்கங்களையும் இணைந்து போராடும்படி வேண்டுகின்றோம்.

ஆங்காங்கே தத்தம் பாணியில் ஒற்றுமை முயற்சியில் ஈடுபடுப வர்கள் அனைவரும் தமது உதிரியான நடவடிக்கைளைவிட்டு 'ஈழத்தேசிய விடுதலை முன்னணி'யை மேலும் விரிவாக்குவதிலும் பலப்படுத்துவதிலும் ஈடுபடுமபடி கேட்டுக்கொள்கிறாம்.

ஈழத்தேசிய விடுதலை முன்னணியோடு இன்னும் இணைந்து கொள்ளாத இயக்கங்களின் உறுப்பினர்கள தத்தம் இயக்கஙகைளயும் ஐக்கிய முன்னணியோடு இணைத்துப் போராடும்படி தமது தலைமை களை உக்கிரமாக வலியுறுததுமபடி கேட்டுக்கொள்கிறோம்.

தமிழர் விடுதலைக் கூட்டணியானது தனது தன்னிச்சையான நடவடிக்கைகளைக் கைவிட்டுவிட்டு 'ஈழதேசிய விடுதலைமுன்னணி''யின் வழிகாட்டுதலின் படி நடக்கவேண்டும என்று வேணடுகின்றோம்.

''ஒன்று பட்டால் உண்டுவாழ்வு—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு''

### சுழிபுரத்தில் ஈழப் போராளிகள் படுகொலை தொடர்பாக

சுழிபுரத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த 6 போராளிகளும் உள்ளூர் மக்கள் இருவரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தவரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஜனவரி 1985 (கடிதம்: 26) ஈழச் செய்தியில் விமர்சனம் செய்திருந்தோம். எதிரியின் அடக்குமுறை உச்சக்கட்டத்தை அடைந்துள்ள இவ் வேளையில் விடுதலை இயக்கங்களிடையே ஒற்றுமை நிலவ வேண்டிய இததருணத்தில் நடைபெற்ற மேற்படி சம்பவம் எம்மால் ஜீரணிக்க முடியாதிருந்தது. இந்தக் கொலைகளைக் கண்டிக்கும போது நாம் உபயோகித்த சில வார்த்தைகள் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தை வேதனையில் ஆழ்த்தியுள்ளதாக அவர்கள் எமது கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளனர். TELO, EROS, EPRLF ஆகிய அமைப்புகளின் கூட்டமைப்பான ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) ஐக்கியம் தொடர்பாக PLOT உட்பட ஏனைய விடுதலை இயக்கங்களுடன் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் இவ்வாறான சொற் பிரயோகங்களைத் தவிர்ப்பது விரும்பத்தக்கது என்று ஈழ தேசிய விடுதலை முன்னணி எம்மைக் கேட்டுக் கொண்டுள்ளதால் அவ்வாறான உறுதி மொழியை கூட்டமைப்புக்கு அளிக்கிறோம். அதேதருணத்தில் விடுதலைப் போராட்டத்திற்கு தடைக்கலலாகவும் இயககங்களின் ஐக்கியத்தற்கு இடையூறாகவும்அமையக் கூடிய இத்தகைய சம்பவங்கள் இடம் பெறாது பார்த்துக் கொள்ளும்படி ஈழத் தேசிய விடுதலை முன்னணியைக் (ENLF) கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## "சோவியத் யூனியனையும், அதனது நட்பு நாடுகளையும் நண்பர்களாகக் கொள்வோம்"

### *ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையில் இயங்க தமிழ் ஈழ விடுதலைப் பேரவை முடிவு*

பிரான்சிலும் உலகின் ஏனைய பகுதிகளிலும் ஈழ விடுதலைப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் ஈழ விடுதலைப் பேரவை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) தலைமையின் கீழ் செயல்பட முடிவெடுத்துள்ளது.

ஈழ மக்களின் போராட்டத்தை புரட்சிகரக் கட்சி அமைப்பு மூலம் முன்னெடுக்கும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைமையை ஏற்று செயல்படுவது என்றும். இதன் மூலம் TELO, EROS, EPRLF இணைந்து உருவாகியுள்ள ஈழத் தேசிய விடுதலை முன்னணியை (ENLF) வலுவாக்குவதென்றும் தமிழ் ஈழ விடுதலை பேரவை தீர்மானித்துள்ளது. சோவியத் யூனியனையும், அதனது நட்பு நாடுகளையும் நண்பர்களாக கொண்டுள்ள EPRLF இன் சர்வதேச நிலைப்பாடும், உலகத் தொழிலாளர்களையும் ஒடுக்கப்பட்ட தேச மக்களையும் ஒன்றுபடக்கோரும் முன்னணியின் கோஷமும் தம்மை EPRLF இன் தலைமையை ஏற்றுச் செயல்பட வைத்துள்ளதாகவும் தமிழ் ஈழ விடுதலைப் பேரவை கூறியுள்ளது.

தமிழ் ஈழ விடுதலைப் பேரவை தமிழ், ஆங்கிலம், பிரஞ்சு மொழிகளில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை போராட்டம் பற்றிய செய்திகளையும், உலகப் புரட்சிகர சக்திகள் பற்றிய செய்திகளையும் "தமிழ் முரசு" என்ற சஞ்சிகை மூலம் வெளியிட்டுவருகிறது.

### *ஈழமக்களுக்கும், போராளிகளுக்கும் உதவிட உருவாகியது தமிழர் நல மருத்துவ அமைப்பு*

MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS (MUST)

ஈழ விடுதலை அமைப்புகளின் ஆதரவுடன் தமிழர் நல மருத்துவ அமைப்பு உருவாகியுள்ளது. ஈழப்பகுதிகளில் கொடிய நோய்கள் பரவி வருகின்றன. சிறீலங்கா வதைமுகாம்களில் ஒருவித தொற்று நோயைப் பரப்பும் ஊசி ஏற்றப்படுகிறது. வதைமுகாம்களால் மீண்டு வரும் ஈழத்தவரிடம் இந்த தொற்று நோய் ஏற்பட்டு மற்றவர்களுக்கும் பரவுகிறது. இதுதவிர இப்போது தமிழ் பகுதிகளுக்கு சிறந்த மருந்துகளை அனுப்புவதையும ஆக்கிரமிப்பாளர்கள் நிறுத்தி வருகின்றனர். இவற்றால் தமது மருத்துவ தேவைக்கு எதிரியின் மருத்துவ அமைப்புக்களை நம்பி இருக்காது ஈழமக்களுக்கு மருத்துவ சேவை வழங்க தமிழர் நலமருத்துவ அமைப்புஉருவாகியுள்ளது. எதிரியோடு போரிடும் ஈழப்போராளிகளுக்கு மருத்துவ உதவி வழங்கவும் மருத்துவ அமைப்பு ஒன்றின் தேவை எழுந்தது. எனவே **ஈழவிடுதலை அமைப்புகளின் முயற்சியாலும் ஒன்றுபட்ட ஆதரவுடனும்** தமிழர் நல மருத்துவ அமைப்பு தோன்றியுள்ளது. இந்த அமைப்பினர் உலகெங்கும் வாழும் தமிழரிடமும், ஈழப் போராட்ட ஆதரவுச் சக்திகளிடமும் மருந்துகளை சேகரித்து வருகிறார்கள். தமிழர் நல மருத்துவ அமைப்புக்கு தாராளமாக உதவுவதுமூலம் ஈழ மக்களினதும, போராளிகளதும் நலனுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம. உதவி செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்க.

**144 சூளைமேடு நெடுஞ்சாலை**
**சூளைமேடு**
**சென்னை-600094**




ஆக்கிரமிப்பு படைகளால் தீக்கிரையாக்கப் பட்ட ஈழமக்கள் குடியிருப்பில் ஒன்று.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழ மக்கள் மீது சிறீலங்கா இராணுவ நடவடிக்கை அத்துலத் முதலியிடம் இந்தியா ஆட்சேபம்

## ராஜீவ்-ஜி. பி. நேரடியாகத் தெரிவித்தனர்

பெப்ரவரி 9, இந்தியாவுக்கு எதிரான விஷமத்தனமான பிரச்சாரத்தை சிறீலங்காவிலும், உலக அரங்கிலும் சிறீலங்கா அரசு கட்டவிழ்த்து விட்டுள்ளது. சிங்கள மக்களிடம் இந்தியா படையெடுக்கப் போகிறது என்று சிங்கள இனவாத அரசு பூச்சாண்டி காட்டி வருகிறது. ஈழப் போராளிகளுக்கு இந்திய அரசு ஆயுதம் வழங்குகிறது, பயிற்சியளிக்கிறது என்று சிங்கள அமைச்சர்கள் தினமும் கூக்குரலிடுகிறார்கள். இந்திய அரசு பலமுறை இவற்றை மறுத்த போதும் சிறீலங்கா அரசு தனது விஷமத்தனமான பிரச்சாரத்தை நிறுத்தவில்லை பெப்ரவரி 9ம் தேதி சிறீலங்கா தேசியப் பாதுகாப்பு அமைச்சன் லலித்அத்துலத் முத (லை)லி இந்தியாவந்திருந்தான். வரும் போது சிறீலங்கா உளவுத்துறை அதிகாரி ஒருவனையும் அழைத்து வந்திருந்தான். இந்தியாவில் ஈழப் புரட்சிவாதிகளுக்கு பயிற்சியளிக்கப்படுவதை நிரூபிக்கவே இந்த உளவுத்துறை அதிகாரியை முதலி அழைத்து வந்தானாம். இந்த சிறீலங்கா ஒற்றன் காட்டிய மோசடிப்படங்களை தமிழக பொலிஸ் டைரக்டர் ஜெனரல் மூலம் இந்திய மைய அரசு அம்பலப்படுத்தியதாக தெரிகிறது. தமிழகத்தில் ஈழப் போராளிகளின் பயிற்சி முகாம்கள் இருப்பது போன்ற மோசடிப் படங்களையே சிறீலங்கா ஒற்றன் கொண்டுவந்ததாகத் தெரிகிறது. இந்த புகைப்பட மோசடி அம்பலப் படுத்தப்பட்டதால் இந்தியாமீது அவதூறு சுமத்தும் அத்துலத் முதலியின் திட்டம் முறியடிக்கப்பட்டது.



ராஜீவ் காந்தி

சிறீலங்கா அமைச்சன் அத்துலத் முதலி இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களையும், வெளிவிவகார அமைச்சக கொள்கை வகுப்புக் கமிட்டித்தலைவர் திரு. ஜி பார்த்த சாரதி, வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஆலம்கான் ஆகியோரையும் சந்தித்ததாக தெரியவருகிறது. அப்போது இவர்கள் சிறீலங்கா அரசு ஈழமக்கள் மீது மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைகளுக்கு கடும் ஆட்சேபத்தை நேரடியாகவே தெரிவித்தனர்.

அத்துலத் முதலியுடன் நடத்திய பேச்சுக்கள் மூலம் ஈழ மக்களின் பிரச்சனைகளை தீர்க்கும் விடயத்தில் சிறீலங்கா அரசு ஆயுத பலத்தையே நம்பி இருப்பதை இந்திய அரசு உணர்ந்துள்ளதாகத் தெரிகிறது. இந்திய அரசு தெரிவிக்கும் சமாதான பூர்வமான யோசனைகளை சிறீலங்கா அரசு தட்டிக்கழிப்பதையும் இந்திய அரசு கவனத்தில் எடுப்பதாக தெரிகிறது. ஆனாலும் இலங்கைத் தீவில் தமிழர்கள் தொடர்ந்து படுகொலை செய்யப்படுவதை இந்தியா பார்த்துக் கொண்டிருக்க முடியாது என்பதும் அத்துலத் முதலியிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஈழத்தில் நிகழும் மனிதப் படுகொலைகள் விஷயத்தில் இந்தியாவின் கவலையும், அதன் ஆக்கப்பூர்வமான அணுகுமுறைகளும் தெளிவாக இருப்பதை இந்த சந்திப்பின் போது இந்திய அரசு உணர்த்தியுள்ளது.

இது தவிர இந்திய கடல் எல்லையில் சிறீலங்கா கடற்படையின் அத்துமீறல் நடவடிக்கைகள் தொடர்வது பற்றியும் இந்தியா காட்டமாக ஆட்சேபித்துள்ளது.



ஜி. பார்த்தசாரதி



தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறீலங்கா கூலிப்படைக்குள் இழுபறி நிலை.

## கட்டுபாடற்ற கொலைஞர் கூட்டம் தாக்குப்பிடிக்குமா?

வேலை இல்லாத் திண்டாட்டம், வறுமை போன்றவற்றால் சிங்கள மக்களிடம் விரக்தி ஏற்பட்டு வருகிறது. இவற்றைக் கண்டு கலக்கமடையும் சிறீலங்கா அரசு தமிழர்களுக்கு எதிரான இனவெறிப் பிரச்சாரத்தைத் தீவிரமாக்கி வருகிறது. சிங்கள வாலிபர்களை திசைதிருப்ப தமிழர்களுடன் யுத்தம் நடத்த வாருங்கள் என அறை கூவல் விடுத்து ஆயுதப் பயிற்சியளித்து ஈழப்பகுதிகளுக்கு அனுப்பி வைக்கிறது. தன்னைப் பாதுகாக்க அப்பாவி சிங்கள வாலிபர்களை துப்பாக்கிக்குத் தீனியாக்குகிறது சிங்கள இனவாத அரசு. ஆனாலும் கூலிப்படையில் அதிகாரிகளுக்கும், சாதாரண படைவீரர்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்பட்டு வருகின்றன. இதுதவிர ஈழப்போராளிகளின் இராணுவ நடவடிக்கைகளினாலும் சிறீலங்கா பட்டாளங்களிடம் ஏற்பட்டுவரும் கலக்கமும் அரசுக்கு பெரும் தலையிடியைக் கொடுத்துவருகிறது. ஈழப் பகுதிகளுக்கு வரும் சிங்கள படையினர் தமக்கு பிரத்தியேகமான சலுகைகளையும் எதிர்பார்ப்பதால் சிறீலங்கா அரசுக்கு தலைவலி ஏற்பட்டுள்ளது. அச்சம் காரணமாக கூலிப்படையினர் பலர் அதிகாரிகளுக்கு தெரிவிக்காமலேயே தப்பி ஓடிவிடுகின்றனர். ஈழப்பகுதியில் ஆக்கிரமிப்பில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கூலிப் படையினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது என்பதுஇயலாத காரியம் என்பதால் கட்டுப்பாடு பற்றியே அரசு கவனம் செலுத்துவதில்லை. ஆக ஈழத்தில் உள்ள சிறீலங்கா பட்டாளங்கள் கட்டுப்பாடற்ற கொலைஞர் கூட்டமாகவே இருக்கின்றன. இவர்கள் விரும்பியவாறு படையைவிட்டு ஓடிவிடுகின்றனர். ஓடிவிடும் கூலிப்படையினர் இடத்தில் சிங்கள பகுதியிலிருந்து மேலும் பலரை அரைகுறை ஆயுதப் பயிற்சியுடன் அனுப்பிவைத்து சமாளிக்கிறது சிறீலங்கா அரசு. ஆனாலும் இந்த நிலை நீடிக்கமுடியாது என்பதையும், கட்டுப்பாடற்ற இந்த கூலிப்படை நிலை குலைந்து போகும் விதத்தையும் சிறீலங்கா அரசு விரைவில் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டே தீரும். மிகுந்த பற்றுறுதியும், கட்டுப்பாடும் உள்ள விடுதலை அமைப்புக்களின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளை கட்டுபாடற்ற கொலைஞர் கூட்டம் மூலம் சிறீலங்கா அரசு சந்திக்க முடியும் என்பது கேலிக்குரிய விஷயமாகவே உள்ளது

## ஈழ விடுதலை அமைப்புக்களின் கூட்டுப் போராட்டம்

## குமுறும் எரிமலையாக வெடிக்கும்: அமிர்தலிங்கம் கூறுகிறார்

தமிழ்ப்பகுதிகளில் 30,000சிங்களவர்களை குடியமர்த்தும் திட்டத்தை ஜீரணிக்க முடியாது. சிங்களவர்கள் தொடர்ந்து குடியமர்த்தப்பட்டால் வன்முறைக்கலவரம் ஏற்படும். நாளுக்கு நாள் சிறீலங்கா இராணுவ வெறியாட்டம் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் விடுதலைக்காக போராடும் இயக்கங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து போரிட வேண்டும். ராணுவ வெறியாட்டம் தொடருமானால் ஈழவிடுதலை இயக்கங்களின் கூட்டுப் போராட்டம் எரிமலையாய் வெடிக்கும். மேற்கண்டவாறு தமிழர் விடுதலைக் கூட்டணி (TULF) செயலதிபர் அ. அமிர்தலிங்கம் வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

## பத்திரிகைச் சுதந்திரத்தின் குரல்வளை நெரிக்கப்படுகிறது

## சிறீலங்கா சிறையில் வெளிநாட்டு செய்தியாளர்கள்!

பெப் 10, சிறீலங்கா அரசு இலங்கைத் தீவைச் சுற்றி இரும்புத்திரையை போடும் முயற்சியில் இறங்கியுள்ளது. ஈழமக்கள்மீது காட்டுமிராண்டித் தனமான படுகொலை நடவடிக்கைகளை உக்கிரமாக்கி வரும் செய்திகளை வெளியில் தெரியவிடாது தடுக்க சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. பத்திரிகைத் தணிக்கையை அமுல்படுத்தியுள்ள நவபாசிச அரசு வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்கு தணிக்கை செய்யப்பட்ட செய்திகளை மட்டுமே வழங்கிவருகிறது. இலங்கைக்கு வரும் (சிறீலங்கா + ஈழம்) வெளிநாட்டு செய்தியாளர்கள் சிறீலங்கா உளவுக் கும்பலால் பின்தொடரப்படுகின்றனர். இதேபோல் இங்கிலாந்திலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த 3 செய்தியாளர்கள் மீதும் சிறீலங்கா உளவுக் கும்பல் கண்காணிப்பு செலுத்தியது. இந்த செய்தியாளர்கள் சிறீலங்கா அரசினால் நாசமாக்கப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள இடங்களை புகைப்படம் எடுத்ததை அவதானித்த உளவுக்கும்பல் அவர்களை கைது செய்தது. சிறீலங்காவின் தலைநகரான கொழும்பில் உள்ள முகாம் ஒன்றில் வைத்து இவர்கள் விசாரிக்கப்படுவதாக தெரிகிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சிறீலங்கா மனித மிருகங்கள்
படுகொலை செய்த ஈழப்பெண்

### மதுரையில் மாணவர்கள் ஊர்வலம்

## "ஒன்றுபடாத ஈழ விடுதலை அமைப்புக்களே இந்தியாவை விட்டு வெளியேறுங்கள்"

மதுரையில் உள்ள தமிழக மாணவர்கள் அண்மையில் ஈழமக்கள் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து மாபெரும் ஊர்வலம் ஒன்றையும், பொதுக்கூட்டத்தையும் நடத்தினார்கள். சுமார் 5000 தமிழக மாணவர்கள் ஊர்வலத்தில் எழுச்சியுடன் பங்கு கொண்டனர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) தமிழ் ஈழவிடுதலை இயக்கம் (TELO) ஈழப்புரட்சி அமைப்பு (EROS) தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம்(PLOT) தமிழ் ஈழ விடுதலை இராணுவம் (TELA) போன்ற ஈழ விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகள் இந்த ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் பங்கு கொண்டனர். தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் (LTTE) இதில் கலந்து கொள்ளவில்லை. ஈழத்தில் போராடும் அமைப்புக்கள் ஒன்றுபடாவிட்டால் அவர்களை பிரதிநிதித்துவப் படுத்தும் இந்தியாவிலுள்ளவர்களை வெளியேற்றுவோம் என மாணவர்கள் கோஷங்கள் எழுப்பினர். இங்கு நடந்த பொதுக் கூட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சார்பில் தோழர் ஈழமணி உரையாற்றினார். TELO, EROS, EPRLF போன்ற அமைப்புக்கள் ஒன்றுபட்டு செயல்படுவதையும், ஏனைய அமைப்புக்களுடன் இநதக் கூட்டமைப்பு ஐக்கியம் பற்றி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருவதையும் ஈழமணி அவர்கள் இங்கு குறிப்பிட்டு பேசினார். மற்றும் இங்கு உரையாற்றிய ஈழ விடுதலை அமைப்புக்களின் பிரதிநிதிகளும் தாம் ஐக்கியப்பட்டு செயல்படுவதில் உறுதியோடு இருப்பதாக தெரிவித்தனர்.

மதுரையில் நடைபெற்ற மேற்படி கூட்டத்தைத் தொடர்ந்து ஈழ விடுதலை அமைப்புக்கள் ஒன்றுபடுவதை வலியுறுத்தும் விதமான நடவடிக்கைகள் தமிழகமெங்கும் விஸ்தரிக்கப்படவிருப்பதாக தெரியவருகிறது.

### அத்துலத் முதலியின் அழித்தொழிப்புத் திட்டம்!

### ஈழப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தமிழ் மக்களை மட்டும் தனித்துவாழ அனுமதிக்கமுடியாது என்று சிறீலங்கா தேசிய பாதுகாப்பு அமைச்சன் அத்துலத் முத(லை)லி கூறியுள்ளான். ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட சமூகத்தவரை மட்டும் வாழ அனுமதிப்பதால் ஏற்படும் அபாயங்களை இப்போது அனுபவபூர்வமாக உணர்ந்துள்ளதாகவும் அத்துலத் முதலி கூறியுள்ளான். அத்துலத் முதலியின் திட்டத்தின்படி 30,000 சிங்கள மக்கள் யாழ்பாணத்தில் குடியேற்றப்படுவர். பாலஸ்தீன மண்ணில் இஸ்ரேலிய குடியேற்றங்கள் நடைபெற்ற பாணியில் இதை நிறைவேற்ற முதலி திட்டமிட்டுள்ளான். இங்கு குடியேறும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்கு "சுயபாதுகாப்புக்கு" நவீனரக துப்பாக்கிகளையும் வழங்கப்போவதாக முதலி அறிவித்துள்ளான். இந்த ஆக்கிரமிப்பு, தேசிய இன ஒழிப்பு நடவடிக்கைக்கு "அகிம்சை ரீதியிலான நடவடிக்கை" என முதலி நாமம் சூட்டியுள்ளான் முதலியின் இந்த திட்டத்துக்கு அரசு அங்கீகாரம் அளித்து விட்டது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மற்றுமோர் இராணுவ நடவடிக்கை

### எதிரிப்படைகள் கொல்லப்பட்டனர் ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன!

பரந்தனிலிருந்து சிறீலங்காவின் தலைநகரான கொழும்பு நோக்கி ஆக்கிரமிப்புப் பட்டாளங்கள் ரயில் வண்டி ஒன்றில் பயணம் செய்து கொண்டிருந்தன. இந்த ரயில் வண்டி முறிகண்டிக்கும், மாங்குளத்துக்கும் இடையே **தமிழ் ஈழ விடுதலை இயக்க** போராளிகளால் தகர்க்கப்பட்டது, இந்த இரயில் வண்டியில் சாதாரண பிரயாணிகள் யாரும் இருக்கவில்லை. நவீன ஆயுதங்கள், வெடிமருந்துகள், தோட்டாக்கள், ஈழமக்களிடம் கொள்ளையடித்த நகைகள், பெறுமதி மிக்க பொருட்கள் என்பவற்றுடன் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் மட்டுமே இதில் பயணம் செய்தன. **மிகவும் சிறப்பான முறையில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தால் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை மிகவும் பாரியதொன்றாகும்.** எதிரிப்படைகளிடம் இருந்த ஆயுதங்கள் த.ஈ.வி.இ. போராளிகளால் கைப்பற்றப்பட்டன. இந்தத்தாக்குதலின் போது சிதறிக்கிடந்த எதிரிப்படைகளின் பயணப் பொதிகளுக்குள் ஈழமக்களிடம் கொள்ளையிடப்பட்ட பொருட்கள், நகைகள் என்பவை கண்டெடுக்கப்பட்டன. இந்த தாக்குதலின் போது நூற்றுக்கணக்கான எதிரிப்படையினர் மாண் டிருக்கலாம் எனத் தெரியவருகிறது. தமிழ் ஈழ விடுதலை இயக்கம், வெளியிட்டுள்ள செய்தி ஒன்று 270 பேர் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஈழப் புரட்சி அமைப்பு, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய அமைப்புக்களுடன் ஐக்கியப்பட்டு செயல்பட்டுவருவதும் குறிப்பிடத் தக்கது.

### சிறீ சபாரத்தினம் கைதானதாக புரளி தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மறுப்பு!

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (TELO) செயலதிபர் சிறி சபாரத்தினம் கைது செய்யப்பட்டதாக பொய்யான தகவல் ஒன்றை சிறீலங்கா அரசு கிளப்பி விட்டிருந்தது. மக்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத் தவும் அவர்களின் கவனத்தை திசைதிருப்பவுமே இந்த ஆதாரமற்ற போலியான வதந்தி கிளப்பப்பட்டதாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் அறிவித்துள்ளது.

### கொல்லப்பட்ட பாதிரியார் தமிழ்நாட்டில்! கொலைபாதக அரசின் குற்றச்சாட்டு!

வங்காலையில் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கத்தோலிக்க மதகுரு வண பஸ்தியன் அவர்களை சிறீலங்கா கொலைப்பட்டாளங்கள் படுகொலை செய்தன. மதகுருவின் சீடர்களான சிறுவர்களையும் படுகொலை செய்து தனது கொலை வெறியை தீர்த்துக்கொண்ட பாசிசப் பட்டாளங்கள் பயங்கரவாதிகளை கொன்றுவிட்டதாக கும்மாளமிட்டன. இதைவிட வேடிக்கை என்னவென்றால் துபபாக்கி சன்னங்களால் துளைக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் கிடந்த வண பஸ்தியன் அவர்கள் தமிழ் நாட்டில் உயிருடன் இருப்பதாக அத்துலத் முதலி கூறியுள்ளான். முன்பு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) சி ஐ.ஏ உளவாளிகளை கடத்தியபோதும் அவர்கள் தமிழ் நாட்டில் இருப்பதாக கண்டு பிடித்த மேதையும் அத்துலத் முதலிதான். படுகொலையும் புரிந்துவிட்டு குற்றத்தை ஈழப் போராளிகள் மீது சுமத்தி தமிழ் நாட்டின் பெயரையும் இழுத்துள்ளது சிறீலங்கா அரசு.

### பூசா முகாமில் கொல்லப்படும் தமிழர்கள்

ஜனவரி 14, ஈழத்தில் சிறீலங்கா கொலைப்பட்டாளங்கள் அப்பாவி மக்களை காரணமின்றி பெரும் தொகையாய் கைதுசெய்து வருகிறார்கள். வயது, பால் வேறுபாடு இன்றி கைது செய்யப்படும் இந்த அப் பாவி மக்கள் சிறீலங்காவில் உள்ள பூசா என்னும் இடத்திலிருக்கும் வதைமுகாமுக்கு இழுத்துச் செல்லப்படு கின்றனர். அங்கே கொடிய தொற்று வியாதிகள் மத்தியிலும், இனவெறி கொண்ட மனித மிருகங்கள் இடை யேயும இவர்கள் உடல், உளரீதியாக வதைக்கப்படுகின்றனர். இந்த பூசா முகாமில் சிறீலங்கா இராணுவம் ஈழமக்கள் 10 பேரைச் சுட்டும் கொலை செய்துள்ளது. பலர் உயிராபத்தான நிலையில் உள்ளனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**சிறீலங்கா கொலைப் பட்டாளங்களால் கொடூர வதை செய்யப்பட்டபோது சயனைட் குடித்து மரித்த தமிழ்ஈழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் போராளி ரவிசேகரன்**

## பேச்சுவார்த்தை முக மூடி கிழிந்தது.
## ஆயுதக்குவிப்பு அம்பலமானது.

பிப்ரவரி 9, ஈழ மக்களின் பிரச்சனைகளை சமாதான முறையில் தீர்க்கப்போவதாக சிறீலங்கா அரசு தம்பட்டம் அடித்து வருகிறது. ஈழ மக்களை அழித்தொழிக்கும் தனது படுகொலைத் திட்டங்களை நிறைவேற்றுவதில் தீவிரம் செலுத்தியபடியே சமாதான தீர்வு பற்றி ஓலமிடுகிறது அண்மையில் (பிப்ரவரி 9) சிறீலங்கா கொலை பாதக அரசுக்கு நாசகார ஆயுதங்களை ஏற்றி வந்த விமானம் ஒன்று இந்தியாவிலுள்ள திருவனந்தபுர விமான நிலையத்தில் தரையிறங்கியது. எரிபொருள் தீர்ந்து விட்டதால் இந்த விமானம் இங்கு இறங்கவேண்டியிருந்தது. விமானத்தில் சரக்குகள் இருப்பதாக பொய்யான தகவலைத் தெரிவித்து இந்த விமானம் இந்தியாவில் இறங்க அனுமதி கோரியது. ஆனால் திருவனந்தபுர விமானநிலைய அதிகாரிகள் இதில் ஆயுதங்கள் இருப்பதை அறிந்து விட்டனர். உடன் இந்த விமானம் இந்திய பாதுகாப்புப் படையால் சுற்றி வளைக்கப்பட்டது. 419 ஆயுதங்களும், 15, 209 கிலோ எடையுள்ள வெடிமருந்துகளும் இதில் இருந்ததாகத் தெரியவருகிறது. ஜோர்டான் நாட்டைச் சேர்ந்த இந்த டசி 8 ரக சரக்கு விமானம் ஜோர்டான் தலைநகரான அம்மானிலிருந்து புறப்பட்டதாகத் தெரிகிறது. போர்த்துக்கல் நாட்டு முத்திரையிடப்பட்டிருந்த நாசகார ஆயுதங்கள் ஜோர்டான் மூலம் சிறீலங்காவுக்கு வழங்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

திருவனந்த புரத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்த விமானம் பின்பு சிறீலங்கா செல்ல அனுமதிக்கப்பட்டது. சிறீலங்கா அரசின் ஆயுதக் குவிப்பும், அது ஈழமக்களுக்கு எதிராக தொடுத்துள்ள அழித்தொழிப்பு யுத்தமும் வெட்ட வெளிச்சமாகி வருகின்றன.

## தலைக்கு விலைபேசியவர்கள்
## துப்பாக்கிகளுக்கு விலை பேசுகின்றனர்!

ஈழப் போராளிகள் பற்றிய தகவல்களை தருவோருக்கு சன்மானம்வழங்கப்படும் என சிறீலங்கா அரசு கூறிவருகிறது. இப்போது ஈழப் போராளிகளின் கரங்களில் இருக்கும ஆயுதங்கள் பற்றித் தகவல் தரும் தேசத் துரோகிகளுக்கும் சன்மானம் தருவதாக சிறீலங்கா அரசு அறிவித்துள்ளது. சிறீலங்கா அரசு சன்மானம் தரும் தொகையும் ஆயுதங்களும் (தலா ஒன்றுக்கு)

| | |
|---|---|
| றைபிள் எஸ் எல் ஆர் 7.62 | ரூபா 25,000 |
| ரசியன் றைபிள் ஏ.கே 47 அல்லது அதை ஒத்தது | ரூபா 20,000 |
| சப்மெசின் துப்பாக்கி | ரூபா 20,000 |
| கைத்துப்பாக்கி | ரூபா 10,000 |
| 303 றைபிள் | ரூபா 5,000 |
| கைக்குண்டு (ரசிய, இந்திய தயாரிப்புக்கள்) | ரூபா 1,000 |
| வெடிமருந்து (1 கிலோவுக்கு) | ரூபா 1,000 |
| ரேடியோ ட்ரான்ஸ் மீட்டர் | ரூபா 10,000 |

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இந்திய அரசு தீர்வு காண்பதா?

## 'இது ஒருபோதும் நடக்காது!

### அல்விஸ் அலறல்

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பிறநாட்டுத் தலைவர்களுடன் பேசிவருகின்றனர். இதுபற்றி இந்தியாவிடம் எமது கவலையைத் தெரிவித்துள்ளோம். சிநேகபூர்வமற்ற இச்செயலையிட்டு நாம் மகிழ்ச்சியடைய முடியாது. இந்திய அரசுதான் தீர்வு காண வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியான ஒரு சூழ்நிலை ஏற்படமுடியாது. இவ்வாறு சிறீலங்கா இராஜாங்க அமைச்சன் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் தெரிவித்துள்ளான்.

## பாலங்களைத் தகர்க்கும் படுகொலைப்படைகள்!

## சீரக்கிய பாலங்களையும் சிதைக்கின்றனர்!

யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து பாலங்களை சிறீலங்கா கொலைப் பட்டாளங்கள் தைப்பொங்கல் தினத்தன்று குண்டுவைத்து தகர்த்தன. நெல்லியடி - கொடிகாமம் வீதியிலுள்ள முள்ளிப்பாலம், வல்லைப் பாலம் கைதடி கேப்பாய் பாலம் என்பவையும் மேலும் இருபாலங்களுமே தகர்க்கப்பட்டவையாகும். இந்தப் பாலங்கள் தகர்க்கப்பட்டதால் பொதுமக்களின் அன்றாட அலுவல்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. விவசாயிகள் தமது விளைபொருட்களை சந்தைகளுக்கு எடுத்துச் செல்வதும் தடைப்பட்டுள்ளது. கிடுகு, விறகு, தேங்காய், மட்டை என்பவற்றை மாட்டு வண்டிகளில் ஏற்றிச்சென்று அன்றாடம் ஜீவனத்துக்கு பிழைப்பு நடத்தும் ஏழைகளும் இதனால் அவதிப்படுகின்றனர். இந்தப் பாலங்களை ஈழ விடுதலைப் போராளிகளே தகர்த்ததாக சிறீலங்கா ஆக்கிரமிப்பாளர்கள் பிரச்சாரம் செய்தனர். இந்தப்பாலங்களை தகர்த்ததுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கம் சுவரொட்டிகளை ஒட்டியிருந்தது. இந்தச் சுவரொட்டிகள் பற்றிய செய்தி அறிந்த கூலிப்படை கொட்டும் மழையிலும் ஓடோடி வந்து அங்கு நின்ற வாலிபர்களை பிடித்து ஆயுத முனையில் சுவரொட்டிகளை கிழித்தெறிய வைத்தது.

தகர்க்கப்பட்ட பாலங்களில் ஒன்றான முள்ளிப்பாலத்தை பொதுமக்கள் சீர்படுத்தினர், அப்போது ஆக்கிரமிப்பு படைகளின் ஹெலிகாப்டர் ஒன்று மேலே வட்டமிட்டவாறு இராணுவ முகாமுக்கு செய்தியனுப்பியது. செய்தியறிந்து வந்த இராணுவ கொலைஞர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இருவர் படுகாயமடைந்தனர். பின்பு சீர் செய்யப்பட்ட முள்ளிக்குளம் பாலம் சிறீலங்கா பட்டாளங்களால் தகர்க்கப்பட்டது.

இதேசமயம் விடுதலை அமைப்புக்களை சேர்ந்த இளைஞர்களும், ஊர்மக்களும் தகர்க்கப்பட்டபாலங்களை சீர்செய்வதில் ஈடுபட்டுவருகின்றனர்.

## ரசிய சஞ்சிகைகள், கைத்துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன!

ஜனவரி 11, மட்டக்களப்பிலுள்ள காரைதீவில் சிறீலங்கா கமாண்டோ கூலிப்படையினர் வீடொன்றை சுற்றி வளைத்து சோதனையிட்டனர். ஈழப் புரட்சிவாதிகளுக்கு ஆதரவாக செயல்பட்ட ஒருவரின் வீட்டையே கூலிப்படை முற்றுகையிட்டது. இந்த வீட்டில் இருந்து கைத்துப்பாக்கிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் நிதி சேகரிப்பு படிவங்கள், சோவியத் யூனியனிலிருந்து வெளிவரும் நாவல்கள், சஞ்சிகைகள், தத்துவார்த்த இலக்கியங்கள் என்பன கூலிப்படையால் கைப்பற்றப்பட்டன. ஆனால் விடுதலைப் போராளிகள் எவரும் கைது செய்யப்படவில்லை. மேலும் இரு வீடுகளை தரைமட்டமாக்கியும் அவ்வீடுகளில் இருந்த கிணற்றில் விஷத்தையும் ஊற்றிவிட்டு கொடியவர்கள் சென்றுள்ளனர்.

## ஈழமீனவர்கள் கொல்லப்பட்டனர்

முள்ளிக்குளத்தில் (மன்னார்) சிறீலங்கா கூலிப்படையினரின் வெறியாட்டத்தில் 8 தமிழ் மீனவர்கள் கொல்லப்பட்டனர். மீன்வாடியில் இருந்த அப்பாவி மீனவர்களை இழுத்துச்சென்று கடற்கரையில் வைத்து கூலிப்படையினர் சுட்டுக் கொன்றுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பலர் 50 வயதுக்கு மேற்பட்டவர்களாகும்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அரச பயங்கரவாதிகளின் அட்டூழியம்

## வயோதிபரும், இளம்பெண்ணும் கொல்லப்பட்டனர்!

ஜனவரி 10, கிளிநொச்சி பஸ்தரிப்பில் ஈழப் போராளிகள் இருவர் நிற்பதைக் கண்ட சிறீலங்கா கமாண்டோ படையினர் அவர்களை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்போது இரு போராளிகளும் தப்பி ஓடி கடை ஒன்றுக்குள் மறைந்தனர். இந்தக் கடைக்குள் சிறீலங்கா கமாண்டோ படையினர் இருவரும் புகுந்தனர் உடனே போராளிகள் தம்மிடமிருந்த கைத்துப்பாக்கியால் ஒரு கமாண்டோவை சுட்டுக் கொன்றனர். இதைக்கண்ட மற்றய கமாண்டோ' SLR துப்பாக்கியை போட்டுவிட்டு தலை தெறிக்க ஓடிவிட்டான். போராளிகள் இருவரும் எதிர்ப்படையாள் விட்டுச் சென்ற துப்பாக்கியையும்கைப்பற்றிக்கொண்டு சென்றுவிட்டனர்.

இதன்பின் அவ்விடத்துக்கு வந்து சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகள் ஈழ மக்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதில் ஒரு வயோதிபரும் இளம்பெண்ணும் கொல்லப்பட்டனர். பல வியாபார நிலையங்களையும், வாகனங்களையும் தீயிட்டு பொசுக்கினர்.

## சிறீலங்கா கூலிப்படைமீது தாக்குதல்!

ஜனவரி 15, கிளிநொச்சியிலிருந்து வவுனியா சென்று கொண்டிருந்த சிறீலங்கா கூலிப்படையினரின் வாகனம் ஒன்றின் மீது ஈழப் போராளிகள் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் கூலிப்படையினர் மூவர் கொல்லப்பட்டனர். 6 பேர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதல் நடந்து முடிந்த பின்பு அங்கு வந்த சிங்கள இராணுவ வெறியர்கள் அப்பாவி மக்களை தாக்கியதுடன், கடைகளையும் தீயிட்டு கொளுத்தினர்.

## இலண்டன் மாநகரில் "சங்கே முழங்கு"

பிப்ரவரி 12, ஈழமக்கள் செய்தித் தொடர்பு நிலையத்தின் இலண்டன் கிளையினர் "சங்கே முழங்கு" என்னும் நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர். ஏற்கனவே இந்த நிகழ்ச்சி இலண்டன், பிரான்ஸ் போன்ற இடங்களில் நடைபெற்றது. இதன் மூலம் ஈழ விடுதலை போராட்ட பிரச்சாரம் பரவலாக மேற்கொள்ளப்பட்டது. பெப்ரவரி 12 ம் திகதி மீண்டும் இலண்டன் மாநகரில் ஈழப் போராட்டத்தை விளக்கி "சங்கே முழங்கு" நிகழ்ச்சி நடைபெற்றது. இலண்டன் வாழ் தமிழ் மக்களிடம் இந்த நிகழ்ச்சிக்கு பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இந்த நிகழ்ச்சியின் போது ஈழப் போராட்ட ஆதரவு நிதி திரட்டப்பட்டதுடன் ஈழச்செய்திகளும் வினியோகிக்கப்பட்டது. மேலும் பல இடங்களில் சங்கே முழங்கு நிகழ்ச்சி மூலம் ஈழப்பிரச்சாரம் மேற்கொள்ள லண்டன் Epic கிளையினர் தீவிர முயற்சி செய்துவருகின்றனர்.

## சிறீலங்காவில் தமிழர் படுகொலை!

சிறீலங்காவில் வாழும் தமிழர்கள் மீது இனவெறித்தாக்குதல்கள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. ஆனால் இச்சம்பவங்கள் மூடி மறைக்கப்படுகின்றன. அண்மையில் குருநாகலில் உள்ள தொடங்கஸ்வத்த என்னுமிடத்தில் ஒரு தமிழ் டாக்டர் (53 வயது) அவரது மனைவியும் (வயது 48) தங்கியிருந்த விடுதியில் வைத்து சிங்களக் காடையரால் குரூரமாக கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டனர். இவர்கள் ஈழத்தை சேர்ந்த மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள்.

## நாயாறு, கொக்கிளாய் பகுதிகளில் மீண்டும்

## சிங்களக் குண்டர்களை குடியேற்றும் திட்டம்!

நாயாறு, கொக்கிளாய் போன்ற பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை மீண்டும் ஏற்படுத்த சிறீலங்கா அரசு திட்டமிட்டுள்ளது, சிறீலங்காவில் மக்கள் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிறைகளில் உள்ள கைதிகளை இங்கு குடியேற்றுவதே சிறீலங்கா பாசிஸ்டுக்களின் நோக்கமாகும். இதற்காக நீர்கொழும்பில்வைத்து தெரிந்தெடுக்கப்பட்ட மோசமான குற்றவாளிகளுக்கு சிங்கள இனவாத அரசு பயிற்சியளிக்கிறதாம். இவர்களிடம் நவீன ஆயுதங்களை வழங்கி, சிங்கள இராணுவத்தின் துணையுடன் ஈழப் பகுதிகளுக்கு அனுப்பும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பாக் ஜலசந்தியை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரத்திட்டம்!

## நவபாசிஸ்டுகளுக்கு உதவும் பிரிட்டிஷ் கொள்ளையர்கள்!

சிறீலங்கா நவபாசிச அரசு ஈழக் கொரில்லாக்களின் தாக்குதல்களால் நிலை குலைந்து வருகிறது. ஈழக் கொரில்லாக்களுடன் நடைபெறும் சமர்களில் தோல்விகளையே தமக்குச் சொந்தமாக்கிவரும் சிறீலங்கா படைகளுக்கு மேலும் நவீன ரக ஆயுதங்களை வழங்கி உசார்படுத்த சிறீலங்கா அரசு அக்கறை காட்டுகிறது. இதற்காக சர்வதேசப் பயங்கர வாதிகளிடம் உதவி கேட்டு உலக வலம் செய்வதற்கு தனது அமைச்சர்களை அனுப்பியுள்ளது. பிரிட்டிஷ் இடம் இருந்து பதினைந்து நவீனரக பீரங்கி விசைப் படகுகளை சிறீலங்கா பெற்றுக் கொள்ளப் போகிறது. பாக்கு நீரிணைப் பகுதியில் கடற்படையைக் குவித்துவரும் சிறீலங்கா அரசு இப்பகுதி முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர திட்டமிடுகிறது. இராமேஸ்வரம், கோடிக்கரை போன்ற இந்திய கடற்கரை ஓரங்கள் வரை சிறீலங்கா கடற்படை இப்போதே வந்து வாலாட்டுகின்றது. பிரிட்டிஷ் பீரங்கிப்படகுகளும் வந்து விட்டால் சிறீலங்கா கடற்கொள்ளையர்கள் அட்டகாசம் அதிகரிக்கும் என்று உறுதியாகக் கூற முடியும். இதனால் இந்திய மீனவர்களின் ஜீவனோபாயத்துக்கும் நிரந்தர அபாயம் ஏற்படப்போகிறது.

## மனித வதைமுகாம்களில் தொற்று நோய் ஊசி!

குருநகர் வதை முகாமில் சிறை வைக்கப்பட்டிருக்கும் ஈழ மக்களுக்கு சிறிலங்கா இராணுவத்தினர் ஒரு வகையான ஊசி போடுகிறார்கள். இந்த ஊசி மருந்து கிருமி பரப்பும் மருந்துகளால் ஆன ஒரு மருந்தாகும். இம்மருந்தில் சொறி சிரங்கு போன்ற தொற்றுநோய்கள் வருகிறது. அது வருமிடமெல்லாம் அழுகிடும் நிலை ஏற்படுகிறது. இங்கு மட்டுமின்றி ஈழமக்கள் எங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்களோ அங்கெல்லாம் இக்கொடூர செயல் நடைபெறுகிறது.

## சிங்களக் காடையருக்கு ஆயுத விநியோகம்

சிறிலங்கா அரசு திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களை ஈழப் பகுதிகளில் ஏற்படுத்தி வருகிறது. அது மட்டுமன்றி ஒவ்வொரு வீட்டிற்கும், ஒவ்வொருவருக்கும் இராணுவப் பயிற்சி கொடுக்கின்றது. ஒவ்வொரு வீட்டிலும், வெடிகுண்டுகள், துப்பாக்கிகள் உள்ளன.

மூதூர் பொலிஸ் நிலையப்பகுதியிலுள்ள அரச கைக்கூலிகளின் வீட்டில் ஆயுதங்களும், வெடிகுண்டுகளும் இருந்தது 18-12-84 ல் அன்று W A ஜெயசிங்க என்பவரின் வீட்டிலுள்ள குண்டு ஒன்று தாமாகவே வெடித்ததன் மூலம் சிறிலங்கா அரசின் தமிழ் மக்கள் அழித்தொழிப்புத் திட்டம் அம்பலமாகிற்று.

## கொக்கிளாயில் கூலிப்படைமுகாம் தகர்க்கப்பட்டது.

## விடுதலைப்புலிகள் இயக்கமே இதை மேற்கொண்டது!

பெப் 14; கொக்கிளாயிலுள்ள சிறீலங்கா இராணுவ முகாம் ஈழக் கொரில்லாக்களினால் தகர்க்கப்பட்டது. நீண்ட நேரம் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகளுக்கும், ஈழக் கொரில்லாக்களுக்கும் இடையே கடுமையான சமர் நடந்தது. இந்த இராணுவ முகாமைநோக்கிச் செல்லும் சாலைகளில் கண்ணிவெடிகள் கொரில்லாக்களால் வைக்கப்பட்டிருந்தன. இந்தச் சமரின்போது எதிரிப் படையைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டதாக செய்தி ஒன்று தெரிவிக்கிறது. சிறீலங்கா அரசு தனது படையில் இருவர் மட்டுமே கொல்லப்பட்டதாக பொய்யான செய்தியொன்றை வெளியிட்டது. இதன் மூலம் தனது படைகளிடம் ஏற்படும் உளவியல் ரீதியான சீர்குலைவைத்தடுக்க சிறீலங்கா அரசு திட்டமிடுகிறது. கொக்கிளாயில் எதிர்ப்படை முகாம் மீதான தாக்குதலை தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கமே (LTTE) சிறப்பான முறையில் மேற்கொண்டனர். கொக்கிளாய்—நாயாறு பகுதிகளில் மீண்டும் சிங்களக் குடியேற்றங்களை இந்த இராணுவ முகாமின் பாதுகாப்புடன் சிறீலங்கா அரசு மேற்கொள்ள விருந்ததும்குறிப்பிடத்தக்கது. ஏற்கனவே இங்கிருந்த சிங்களப் பேரினவாதக் காடையர்களுக்கு இந்த முகாம் பாதுகாப்பாக இருந்து வந்தது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈழத்தேசிய விடுதலை முன்னணி (ENLF)

## (TELO, EROS, EPRLF)

***ஈழப் போராட்டத்தை முன்னெடுக்க உறுதி.***

***ஏனைய அமைப்புக்களையும் இணைக்க முயற்சி.***

**தமிழ் ஈழ விடுதலை இயக்கம்** (TELO) **ஈழப்புரட்சி அமைப்பு** (EROS) **ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி** (EPRLF) ஆகிய ஈழத்தில் போராடும் முன்னணி அமைப்புக்கள் மூன்றும் ஏற்கனவே ஐக்கியப்பட்டு ஈழவிடுதலைக் கூட்டமைப்பு என்னும் பெயரில் செயல்பட்டு வருவது தெரிந்ததே. ஈழப்போராட்ட வரலாற்றில் உருவான ஆயுதம் ஏந்திப் போராடும் விடுதலை அமைப்புக்களின் முதலாவதும், முக்கியமானதுமான இந்த ஐக்கியம் ஈழவிடுதலைப் போராட்டத்தை வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்ல உந்துதல் அளிக்கிறது.

இதுவரை ஈழ விடுதலைக் கூட்டமைப்பு என்ற பெயரில் இயங்கிவந்த இந்த அமைப்புக்களின் ஐக்கிய முன்னணி இப்போது ஈழத் தேசிய விடுதலை முன்னணி (ENLF) என்ற பெயரில் இயங்குவதாக தீர்மானித்துள்ளது.

**ஈழத் தேசிய விடுதலை முன்னணி** (ENLF) தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் (LTTE) தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துக்கும் தம்முடன் வந்து இணையுமாறு அழைப்பு விடுத்துள்ளது. அதே நேரம் வளர்ந்து வரும் இயக்கங்கள் பலவற்றையும் அணுகி அவர்களை ஓர் அரசியல் கூட்டமைப்புக்குள் முதற்படியாக கொண்டு வருவதற்கு ஏற்றவாறு பலகாத்திரமான வேலைகளை மேற்கொண்டு வருகிறது.

## ஈழத்தின் புதல்வர்கள் – புதல்வியரது பிற்காலக் கனவுகள் சிந்தும் இரத்தத்தில் சிதைந்து கிடக்கின்றன.

***அடைக்கலம் தேடும் ஈழமக்கள் இந்திய மண்ணில் குவிகின்றனர்!***

பெப்.15- ஈழப்பகுதி எங்கும் சிறீலங்கா அரசின் கொலைப்பட்டாளங்கள் ஈவிரக்கமற்ற மனித வேட்டைகளை உக்கிரப்படுத்தியுள்ளன. வயோதிபர்கள், பெண்கள், பச்சிளம் பாலகர்கள் அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றி தமிழர்கள் என்ற காரணத்துக்காக படுகொலை செய்யப்படும் கோரத்தனம் ஈழத்தில் அன்றாட நடைமுறையாகிவருகிறது. ஈழமண்ணில் சிந்தப்பட்டுள்ள இரத்தத்தில் ஈழத்தின் புதல்வர்களதும், புதல்வியரதும் பிற்காலக்கனவுகள் சிதைந்து போயுள்ளன. அந்நியரின் ஆக்கிரமிப்பால் சொந்த மண்ணில் சுதந்திரமிழந்த மக்கள் அடைக்கலம் தேடி இந்தியமண்ணை நாடி ஓடி வருகிறார்கள். இராமேஸ்வரம், வேதாரணியம், கோடிக்கரை பகுதிகளில் ஆயிரக்கணக்கில் ஈழ அகதிகள் வந்து குவிகின்றனர். நள்ளிரவில், மீன் பிடிப்படகுகள் மூலம் தமது சின்னஞ் சிறு குழந்தைகளுடன் இவர்கள் மனித மிருகங்களிடமிருந்து தப்பித்து வருகின்றனர். மன்னாரில் இருந்து பெருந்தொகையான குடும்பங்கள் இராமேஸ்வரம் பகுதிக்கு தினமும் வந்து குவிகின்றனர். வங்காள தேசத்தில் இருந்து இந்தியாவுக்கு அகதிகள் வந்து குவிந்ததைப்போல இப்போது ஈழத்தில் இருந்தும் அகதிகள் அடைக்கலம் தேடி இந்தியாவுக்குள் குவிகின்றனர்.

அடைக்கலம் தேடிவரும் ஈழ அகதிகளைச் சமாதானமான சூழ்நிலை ஏற்படும் வரை திருப்பி




*சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளின் துப்பாக்கிப் பசிக்கு தீனியான ஈழத்தின் மக்களில் ஒருவர்.*

www.tamilarangam.net



அனுப்புவதில்லை என்று இந்திய மைய அரசு தீர்மானித்துள்ளது. இதேவேளையில் ஈழ அகதிகள் இந்தியாவுக்குள் அதிகரித்து வருவதால் இவர்களைத் திருப்பி அனுப்பக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்த சிறீலங்கா அரசு முனைய வேண்டும் என்பதையும், இது விடயத்தில் இந்தியாவுக்குள்ள அக்கறையையும் இந்திய அரசு, சிறீலங்கா அரசிடம் தெரிவித்துள்ளது.

## கொரில்லாக்களின் தாக்குதலை மூடிமறைக்கும் முயற்சி: சிறீலங்கா பத்திரிகைகள் எதிர்ப்பு.

### *சிறீலங்கா இராணுவத் தளபதியின் பேட்டியைப் புறக்கணித்தன.*

சிறீலங்கா கடற்படை முகாம் மீது மக்கள் விடுதலைப்படை (PLA) மேற்கொண்ட இராணுவ நடவடிக்கை பற்றி சிறீலங்கா அரசு மவுனம் சாதித்தது. சிறீலங்கா நவபாசிச அரசின் தகவல் சாதனங்கள் எதுவுமே நடக்காதது போல காட்டிக்கொண்டன. ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் (EPIC) மூலம் காரை நகரில் சிறீலங்கா கடற்படை முகாம் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (EPRLF) இராணுவப் பிரிவான மக்கள் விடுதலைப்படையால் தாக்கப்பட்ட செய்தி வெளியானது. இதனால் இந்திய செய்தி நிறுவனங்களும், ஏனைய வெளிநாட்டு செய்தி நிறுவனங்களும் காரை நகர் கடற்படை முகாம் தாக்கப்பட்ட செய்தியை அறிவித்தன. இந்தசெய்தி காட்டுத்தீ போல் பரவியது. இதனால் சிறீலங்கா கடற்படையினரின் குடும்பங்கள் மத்தியில் பதட்டம் ஏற்பட்டது. சிறீலங்கா அரசு உண்மைகளை மறைப்பதும், தமது பிள்ளைகளதும், உறவினர்களதும் கதி என்ன என்பது பற்றிக்கூட தெரிவிக்காது அலட்சியமாக இருப்பதும் இந்தக் குடும்பங்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. உலக நாடுகளிலும் சிறீலங்கா அரசு தனது தோல்விகளை மூடி மறைக்க முயல்வது அம்பலமானது. சிறீலங்கா பட்டாளங்களின் பலவீனமும் ஈழக் கொரில்லாக்களின் பலமும் வெட்ட வெளிச்சமாகியது. இந்த நிலையில் தனது மௌன நாடகம் முறியடிக்கப்பட்டதை அறிந்த அரசு படிப்படியாக பொய்களைக் கலந்து வெளியிட்டது. முதலில் கடற்படை முகாம்மீது சிறிய தாக்குதல் நடந்ததாக கூறிய கொலைபாதக அரசு பின்பு தனது பட்டாளங்கள் இருவர் கொல்லப்பட்டதாக கூறியது. சிறீலங்கா அரசு இவ்வாறு அறிவித்த போது ஐலண்ட், சண் போன்ற சிறீலங்காவிலுள்ள பத்திரிகைகள் கண்டனம் தெரிவித்தன, சிறீலங்கா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள நளின் செனிவிரத்தினாவை பேட்டி காண இருந்த இந்த பத்திரிகைகள் அரசின் மூடி மறைப்பு நாடகத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கு முகமாக பேட்டி காண்பதை நிறுத்தி விட்டன. இந்தச் செய்தியை பி.பி.சி. வானொலியின் சிறீலங்கா முகவர் மெர்வின்.டி சில்வாவும் கூறியிருந்தார் என பி.பி.சி பெப்ரவரி 15 ம் தேதி தனது ''இலங்கை பற்றிய கண்ணோட்டம்'' என்ற செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

## புத்தர் ஒரு இந்தியர்.

### *அடையாள அட்டை காட்டாவிட்டால் புத்தரும் சிறீலங்கா வதை முகாமில் வாடுவார்.*

''புத்தர் ஒரு இந்தியர். அவர்தான் எமது புத்தமதத்தின் மூலவர். அவர் எப்போதோ சிறீலங்கா வந்திருந்தார். நல்ல வேளை. புத்தர் இப்போது உயிருடன் இருந்து இலங்கை வந்தால் அவரும் அடையாள அட்டையை காட்ட வேண்டியிருக்கும். இல்லையெனில் சிறைமுகாமில் அடைக்கப்பட்டிருப்பார். இவ்வாறான காலகட்டத்தில்தான் நாம் வாழுகிறோம்.'' இவ்வாறு ''சிறீலங்காவில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றிய சிறீலங்கா மக்கள் கட்சியைச்'' சேர்ந்த விஜய குமாரதுங்கா கூறியுள்ளார்.

www.tamilarangam.net



## மட்டு நகரில் கூலிப்படைமீது தாக்குதல்.

## கூலிப்படையினர் இருவரை போராளிகள் கடத்தினர்!

மட்டு நகரில் உள்ள வெல்லாவெளி பொலிஸ்நிலையத்தைச் சேர்ந்த இரண்டு கூலிப்படையினர் ஈழப் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர். இவர்களை தேடி ஜீப் வண்டி ஒன்றில் வந்த சிறீலங்கா அதிரடிப்படையைச் சேர்ந்த எட்டு கூலிப்படைக் குண்டர்கள் ஈழப் போராளிகள் வைத்திருந்த கண்ணி வெடிகளில் சிக்கி உயிரிழந்தனர். இவர்களிடம் இருந்த ஆயுதங்கள் போராளிகளால் கைப்பற்றப்பட்டதாக தெரிகிறது. இச்சம்பவத்தின் பின் சிறீலங்கா கூலிக்கார கொலைப் பட்டாளங்கள் பாலையடி என்னும் கிராமத்தில் ஈழமக்களின் 32 குடியிருப்புக்களை கொளுத்தியதுடன், மக்கள் மீது சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்துள்ளனர். இதில் 16 பேர் காயமடைந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சிங்களக் குடும்பங்களைக் குடியேற்றும் திட்டம்

## தொண்டமான் எதிர்ப்பு.

பெப். 17, இலங்கைத்தீவில் வெடித்துக் கிளம்பியுள்ள ஈழத்தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்குமாறு மலையகப் பகுதிகளில் உள்ள தமிழர்களை தூண்டிவிடும் பிற்போக்கு சக்திகளை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எஸ்.செல்லச்சாமி கண்டித்துள்ளார். இது இவ்வாறு இருக்க சிறீலங்கா அமைச்சர் தொண்டமானும் ஈழப் பகுதிகளில் சிங்களவர்களைக்குடியேற்றும் திட்டத்தினை எதிர்த்துள்ளார். "தின ராசா" என்ற பத்திரிகைக்கு தொண்டமான் அளித்துள்ள பேட்டியொன்றில் இலங்கைத் தீவில் கொழுந்து விட்டெரியும் தமிழர் பிரச்சனையை—சிங்களவர்களைக் குடியேற்றும் திட்டம் மூலம் தீர்க்க முடியாது எனக் கூறியுள்ளார். இதுபோலவே தமிழர்களின் நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை முன்னாள் சிறீலங்கா கல்வி அமைச்சர் அல்ஹஜ் பதியுதீன் முகமது கண்டித்துள்ளார். இந்த நடவடிக்கை இப்போதுள்ள நிலைமையை மேலும் மோசமடையச்செய்யும் என அவர் எச்சரித்துள்ளார்.

## தாயகமண்ணில் வாழமுடியாத ஈழமக்கள்.

## செம்மலை, குமுளமுனை கிராமங்களில் வெறியாட்டம்

பெப்-18 செம்மலை. குமுலமுனை ஆகிய தமிழ்க் கிராமங்களில் உள்ள தமிழர்கள் அனைவரும் கடந்த டிசம்பர் மாதம் சிறீலங்கா ஆக்கிரமிப்பு படைகளால் விரட்டியடிக்கப்பட்டனர் கடந்த இரண்டு மாதமாக சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் அகதி முகாம்களில் இவர்கள் வாழ்ந்து வந்தனர். செப்டம்பர் 15ம் திகதியளவில் மீண்டும் அவர்கள் தமது பகுதிகளுக்குச் சென்றனர். தமது வயல்களில் அறுவடை செய்து கொள்ள சென்ற இவர்களை இரத்தவெறி கொண்ட சிறீலங்கா கொலைப் பட்டாளங்கள் படுகொலை செய்துள்ளன. 52 ஏழை விவசாயிகள் செத்துமடிந்துள்ளனர். இவர்கள் அனைவரும் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மக்களை தமது துப்பாக்கிப் பசிக்கு தீனியாக்கிய கொலைப்பட்டாளங்கள் "பயங்கர வாதிகளை" ஒழித்துவிட்டதாக ஒலமிட்டுள்ளன.

## இஸ்லாமிய மதகுரு படுகொலை!

தமிழ் மக்களை வேறுபாடின்றி இராணுவம் மிருகத்தனமாகத் தாக்கி; கொன்றும் வருகிறது. இஸ்லாமிய மதத் தலைவரும். பட்டு நகரிலுள்ள கல்முனைப்பள்ளிவாசல் தர்மகர்த்தாவுமான மீரா முகைடீன் கல்முனைச் சந்தியில் வைத்து பொலிசாரினால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

**சிறீலங்கா அரசுக்கு வழங்கும் உதவிகளைநிறுத்துக!**

**ஈழ அகதிகளுக்கு உடனே உதவுக!**

**தாயகம் திரும்பியோர் முற்போக்கு இயக்கம் கோரிக்கை.**

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தட்சர், ஆகியோருக்கும் யுனேஸ்கோ நிறுவனத்துக்கும் மகஜர் ஒன்று அனுப்பியுள்ளனர். அதில குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 150 வருடங்களுக்கு முன்பாக தமிழ்நாட்டிலிருந்து ஆங்கிலேய முதலாளிகளால் இலங்கைக்கு தேயிலைத் தோட் டங்களில் கூலி வேலை செய்வதற்காக தமிழநாட்டு மக்கள் அழைத்து செல்லப்பட்டனர். இலங்கைத்தீவின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருந்த தோட்டத் தொழிலாளர்களான தமிழர்களின் பிரஜா உரிமை இலங்கைத்தீவின் ஆட்சி அதிகாரம் சிங்களவர்களிடம் கைமாறிய பின்பு பறிக்கப்பட்டுவிட்டது. இதன்பின காலம காலமாய் சிங்களப் பேரினவாதிகளால் படுகொலை செய்யப்பட்டும், குடியிருப்புக்கள் கொளுத்தப்பட்டும். பெண்கள் கற்பழிக்கப்பட்டும வருகின்ற கொடுமைகள் அதிகரித்த வண்ணமே உள்ளன. இத்தகைய கொடுமைகளை நிகழ்த்தும சிறீலங்கா சிங்கள இனவாத அரசு மீது பொருளாதாரத் தடை விதிக்குமாறு உங்களை வேண்டுகிறோம். ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாருக்கும், இநதியப் பிரத மருக்கும் நாம் விடுக்கும் வேண்டுகோள்.

- 1½ லட்சம் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வந்துள்ளனர் அவர்களுக்கு அகதிகள் அந்தஸ்து வழங்கி அவர்களின் குழந்தைகளைப் படிக்க வசதிசெய்க.
- இலங்கைத்தீவில் தமிழர் பகுதிகளில் பட்டினியால் வாடும் மக்களுக்கு இந்திய அரசும், அய்.நா சபையும் உணவு மற்றும் மருத்துவ வசதிகள் வழங்கவேண்டும்.
- இனப் படுகொலைகளால் பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்களுக்கு நஷ்ட ஈடுபெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சிறீலங்காவுக்கு ஏனைய நாடுகள் ஆயுத உதவி வழங்குவதை அய்.நா, சபை உடனே தடுத்து நிறுத்த வேண்டும்-

—மேற்கண்டவாறு மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெல்க! ஈழ மக்கள் புரட்சிகர விடுதலைப் போராட்டம்!

**PRINTED MATTER**

**EPIC**

Post Bag: 5551

MADRAS-600 094

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு

EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION

LONDON BRANCH: EPIC B. M. Box 1738, LONDON WCI N 3XX

www.tamilarangam.net

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்